சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ந் [உ

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

Hindu Organ

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

பிரதி விலை : சதம் 40

புத் 93] யாழ்ப்பாணம்:- துந்துபி ஞு, ஆடிமீ 16, 23, 30-7-82 வெள்ளிக்கிழமை [இல-4



LANKA RECEIVED ... PERIODICALS DIVISION UNIV... LIBRARY * CAMPUS


எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கும்

# நல்லூர்க் கந்தன் திருவிழா

## கந்தசுவாமியாரின் கவினருட் கோலக் காட்சிக் காலம்

## அடியார்களின் நியம நய சீலம் பேணி அரிய ஒழுங்குகள்

திருவிழாக்காலம் மட்டுமன்றி ஒவ்வொரு நாளும் கோயில் ஒழுங்கு ஒழுங்காக வைக்கும் ஆற்றல் இயல்பாயமைந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிற்பரிபாலனத் தலைவரின் சிந்தையில் என்றும் நல்லூர்ப்புனிதநிலத்தை மேலும் புனிதமாக்கும் எண்ணங்களே தோன்றும். ஆண்டுக்காண்டு வேண்டிய புனர் அமைப்புகளும் புதிய அமைப்புகளும் நடைபெற்றுவருவது அடியார்களின் சமயாபிமானத்துக்குத் தூண்டுகோலாகும்.

ஆடி வளர்பிறைப் பஞ்சமித் திதியில் உத்தர நட்சத்திரத்தில் (25-07-1982) நல்லைக் கந்தன் கொடியேறிப் பெருவிழாக்கள் சிறப்பாக நிகழ்கின்றன. ஆவணித் திங்கள் 1-ஆம் நாள் (17-08-1982) திருத்தேர் உலாச் சிறப்பும் அடுத்த நாள் ஆவணி அமாவாசைத் திதியிலே தீர்த்த நியமமும் நிகழும்.

நல்லைக் கந்தன் திருக்கோபுர மணி நாதம் கேட்கும் பரந்த எல்லைக்குள் இந்த இருபத்தைந்து நாட்களும் தெய்வீக ஒளி வீசும் அநுபவம் அடியார்களுக்குண்டு என்பதை யாவரும் அறிவர்.

நல்லை ஆதீனத்தில் இந்த வைபவ காலம் அதிசிறப்பாகவுள்ளது.

### நல்லூரில் நாதனவன் என்றுளும் ஆள்கின்றான்!

பன்னிருகைப் பாலனருள் பாலிக்கும் பாங்கமைந்த
நன்ஞான நல்லூரில் நாதனவன் — என்றுளும்
முன்னின்று மூவிலைவேல் மூர்த்தியாய் ஆள்கின்றான்
என்றென்று சொல்வோம் எழில்!

உ

### நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம் விசேஷ திருவிழாக்கள் - 1982.

25-07-82 — 19-08-82.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 7 82 ஞாயிறு | கொடியேற்றம் | பகல் | 12 மணி | 1-ம் | திருவிழா |
| 3 8 82 செவ். | மஞ்சம் | மாலை | 6 மணி | 10-ம் | ,, |
| 12 8 82 வியா. | கார்த்திகை | மாலை | 6 மணி | 19-ம் | ,, |
| 13 8 82 வெள்ளி | வேல்விமானம் | மாலை | 6 மணி | 20-ம் | ,, |
| 14 8 82 சனி | கைலாசவாகனம் | ,, | 6 மணி | 21-ம் | ,, |
| 15 8 82 ஞாயிறு | தண்டாயுதபாணி திருவிழா | காலை | 6 மணி | 22-ம் | ,, |
| 16 8 82 திங்கள் | சப்பரம் | மாலை | 6 மணி | 23-ம் | ,, |
| 17 8 82 செவ், | திருத்தேர் | காலை | 7 மணி | 24-ம் | ,, |
| 18 8 82 புதன் | தீர்த்தம் | காலை | 7 மணி | 25-ம் | ,, |
| 16 8 82 வியாழன் | பூங்காவனம் | மாலை | 6 மணி | 26-ம் | ,, |

# அணி திகழப் பொலிந்த மணிவிழா மாண்பு

## மாநகர்களிற் கலாநிதி கைலாசநாதக் குருக்களுக்கு மணிவிழா

'கலைமகள்' ஆசிரியர் வாகீசகலாநிதி
கி. வா. ஜகந்நாதன் தலைமையில்
யாழ்நகரில் நிகழ்ந்த மாவிழா

யாழ் பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறைத் தலைவரும் பேராசிரியருமாகிய கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் ஆறுபத்தாண்டுகள் நிறைவு குறித்த மணி விழா யாழ்நகரில் வைத்தீஸ்வர வித்யாலய மண்டபத்தில் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையிற் சென்ற வாரம் (10-07-1982) நனி சிறப்பாக நிகழ்ந்தது.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பிரார்த்தனை உரையின் பின் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன், பேராசிரியர் கலாநிதி சு. இந்திரபாலா, வித்வத் திருமதி வசந்தா வைத்தியநாதன் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நம சிவப்பிரகாசம் ஆகியவர்களின் மகிழ்ச்சி உரைகள் நிகழ்த்தப் பெற்றன.

விழாத் தலைவர் பிரம்மஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சிறப்புரை வழங்கினர். மணிவிழாக்கண்ட குருக்கள் அவர்களின் இயல்பாயமைந்த அரிய குணநி

(வளர்ச்சி 8-ம் பக்கம்)



நல்லூர் — கேதீச்சரம்

## பாத யாத்திரை

நல்லை ஆதீனத்திலிருந்து புறப்பாடு

திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் நிகழும் கதிர்காமத் திருவிழா வழிபாட்டின் தீர்த்தப் பெருவிழாவிற் கலந்து கொள்ளும் பொருட்டு, திருஞான சம்பந்தர் பாத யாத்திரைச் சபையினர் தமது 27-வது ஆண்டு தொடர் பஜனைப் பாதயாத்திரையை (நாளை) 31-7-82 சனிக்கிழமை ஆரம்பிக்க இருக்கிறார்கள். நல்லைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் மாலை 3 மணிக்கு நிகழும் விசேட பூசை வழிபாட்டுடன் பாத யாத்திரையை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைப்பார்கள்.

மேற்படி பாதயாத்திரை நிகழ்ச்சி வழமைபோல இளைப்பாறிய அதிபரும், சைவப் பெரியாருமாகிய திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமையில் நிகழும். யாத்திரைக் குழுவினர் நல்லைத் திருமுருகன் கோயில் வழிபாடு முடித்துக்கொண்டு, நல். — பருத்தித்துறைவீதி, செம்மணி வீதிவழி மாயன் மார்கட்டு அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்சேர்வார்கள். ஆங்கு வழிபாடாற்றிக்கொண்டு புராணபடன நிகழ்ச்சியை ஆரம்பிப்பர். நாட்டின் பல பாகங்களையுஞ் சேர்ந்த சிவனடியவர்கள் கலந்து கொள்ளும் யாத்திரை மறவன்புலவு, பூநகரி, பாப்பாமோட்டைவழியாக, கேதீச்சரம் சேர்வார்கள். பாதயாத்திரையிற் கலந்து பரம்பொருளின் பெரும் புகழைப் பாடிப் பரவ வம்மின்! வம்மின்! என்று சிவன் அடியவர்கள் அன்புடன் அழைக்கின்றனர்.

## கதிர்காமக் கந்தன் பதிமேவு விழாக்கள்

கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகம் கொண்ட குமரக் கடவுள் கதிர்காமத்தில் எழுந்தருளி மனித குலத்தின் விதியை வழி நடத்தி வரும் வரலாற்றுப் பொலிவு மிகுந்த மாணிக்க கங்காதீர வடிவேலன் மா விழாக்கள் என்றும்போல் இன்றும் அடியார்களைக் கவர்ந்தவண்ணம் இருக்கின்றன.

சைவ அடியார்களுக்குப் பாரம்பரியமாக வுள்ள மட வசதிகள் இப்பொழு தில்லாமை என்ற பெருங் குறையை ஆங்கு வழிபடும் அடியவர்களின் உள்ளக் குமுறல் மீட்டு மட வளம் மீண்டும் பெருகக் கந்தன் அருள் புரிவாராக.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

துந்துபி ஸ்ரீ ஆடி மீ
16-7-82 23, 30-7-82 வெள்ளி

## மூக்கைச் சுற்றித் தொடமுயல்வதா!

இந்தியத் தென் பகுதியையும் ஈழத்திருநாட்டையும் இடையிற் பிரிப்பது இரை திரை இல்லாச் சின்னஞ் சிறு கடலே! தாய் நாட்டிற்கும் சேய் நாட்டிற்கும் நாவாய்ச் சேவை நயத்தை எம்முன்னோர்கள் புண்ணிய சீலர்களாகை யால் அநுபவித்தனர். ஆனால் முன்னேற்றம் முற்போக்கு என்ற முழக்கம் எப்பொழுது எழுந்ததோ அப்பொழுதே நேர்பாதையிலிருந்து விலகிச் சுற்று மார்க்கத்தைத் தேடிமயங்கத் தொடங்கினன் மனிதன் என்று சொல்ல வேண்டி வந்துவிட்டதே!

சிதம்பரம், திருவண்ணாமலை, பழனி மதுரை, இராமேச்சுரம், வேதாரணியம் ஆதியாம் பலதலங்களுக்கெல்லாம் ஈழமணித் திருநாட்டிலிருந்து கடல் வழியாக யாத்திரைசெய்து அருள்பெற்றுய்ந்தனர் எம் மூதாதைகள். சைவமும் தமிழும் இரு மருங்கிலும் ஒருங்கு விளங்கும் நிலைமை ஒன்றிருந்தது.

ஆனல் இன்றே இந்திய யாத்திரை என்றல் எத்தனையோ தடைகளைத் தாண்டிக் களைப்புற்றுக் காணும் ஒரு நிகழ்ச்சியாய் விட்டது.

வான்வழி விமானச் சேவை பலாலி வழியாக இருந்த வசதியும் இல்லை. தொழும்பத் தலைமன்னாரிலே தண்டனைப் பயணம், அல்லது பெருகபொருள் விரயஞ்செய்து கட்டுநாயக்கா வழி விமானப் பிரயாணம் தான் இலங்கையிலுள்ளார்க்குரிய மார்க்கமாய்விட்டது.

எட்டிப் பார்த்தால் இராமேசுவரம் தெரியும் என்பர் முன்னேர். கூப்பிடு தொலைவில் உண்டு கோடிக்கரையென்றுஞ் சொல்லி மகிழ்வர் பழையகாலத்திலே யாத்திரை செய்வோர்.

உழவர்கள் திருக்கார்த்திகைத் தீபத் திருவிழாவின் போது ஏர் பூட்டும் எருதுகளை அங்கிருந்து கடல்வழியாகவே யாழ் நாட்டிற்குக் கொண்டு வருவர். அவர்கள் மூக்கினை நேராகத் தொட்டனர். நேரமும் சிரமமும் சேமித்தனர். அவ்வாறின்றி ஏனோ செவியைச் சுற்றி மூக்கைத் தொடும் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று நாம் வினவு கின்றோம்!

போனது போகட்டும் இனிமேலாவது புத்தி புலப்படட்டும்.

இயற்கைப் பாதையைப் பழையபடி பயன்படுத்த எடுக்கும் முயற்சி முன்னேறட்டும் வெற்றியாக முடிவுறட்டும்.

இருள் சூழ்ந்த இந்நிலையில் ஒரு ஒளி தோன்றும் வாய்ப்புண்டாக இடமுண்டென்றறிகின்றோம், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையாரின் அரியமுயற்சியால் கோடிக்கரைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையே கப்பற் போக்குவரத்துச் சேவை நிறுவப்படும் அறிகுறி தோன்றியிருக்கின்றது இது போன்ற அபிவிருத்திகளுரிய திட்டம் வேறெதுவும் இருக்கமாட்டாதாகையால், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையாரின் முயற்சி முன்னேற்றமடைந்து செயற்பட வேண்டுமென்று இறைவனை எல்லோரும் இறைஞ்சுவோமாக.

## திருக்கேதீச்சரத்திலே கதிர்காமத் தீர்த்தவிழா

முன்னைவளமில்லாது மனங் கலங்கிய முருகன் அடியார்கள் இற்றைக்கு இருபத்தைந்தாண்டுகளுக்கு முன் திருக்கேதீச்சரத்திலே கதிர்காமக் கந்தனைச் சாணவும் பாலாவியிலே மாணிக்ககங்கா தீர்த்தத்தைப் பருகவும் வழிசெய்த வழியில் இன்னமும் கதிர்காமத் தீர்த்தவிழா திருக்கேதீச்சரம் பாலாவியில் நிகழ்ந்து கொண்டே வருகிறது.

சைவ சித்தாந்த வித்தகர் மு ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையிலே சிவனடியார் திருக்கூட்டப் பாதயாத்திரையாகப் பவனிசெய்யு நியமம் இவ்வாண்டு ஆடி 16 ம் நாள் ( 31-07-82 ) நல்லூரில் ஆரம்பமாகி ஆடி 19 ம் நாள் ( 04-08-82) திருக்கேதீச்சரத்தையடையும். வழி நெடுக யாத்திரிகர் வரவேற்கப்படுவது வழமை திருக்கேதீச்சரத் தேவாரம்பாடிய திருஞானசம்பந்தர் அபிஷேகம் அன்றிரவு நிகழும்.

சித்தாந்த வித்தகர், கயப்பாக்கம்,
செட்டியார் சேவைநலம்,

## பிறந்த நாள் வாழ்த்துரை

சித்தாந்த வித்தகர், சபையின் முன்னாள் மாநாட்டுத் தலைவர் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியாரின் எண்பத்தேழாம் பிறந்தநாட் பாராட்டு

(சைவபரிபாலன சமயப்பிரசார அமைப்பாளர்
திரு. மு. மயில்வாகனம் அவர்கள்)

சிவநெறிப் பண்பும் தமிழ்ப் புலமையும்
செறிந்த ஐயா!

வணக்கம்

தங்களுடைய 87-வது பிறந்த நாள் பாராட்டு விழாவைபபற்றிய விளம்பரம் எனக்கு இன்றுதான் கிடைத்தது. அதனைக் கண்ணுற்றதும் பெருமகிழ்ச்சி அடைந்தேன். உங்களுடைய சிறிய தந்தையார் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியாரவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நீங்கள் சைவத்தொண்டு புரிந்து வருவதை சைவ உலகம் போற்றக் கடமைப் பட்டிருக்கிறது. "மானிடப்பிறவிதானும் வகுத்தது மனம் வாக்காயத் தானிடத்தைந்து மாடும் அரன் பணிக்கு" என்ற வாக்கியப்படி உங்களுடைய வாழ்க்கையை நடத்தி வருகின்றீர்கள். திருமுறைகள் வேத சிவாகமங்களின் சாரம் என்பதை உணர்ந்து அவற்றின் பெருமையைச் சைவ உலகம் உணரும்படி திருமுறைக் கோயில்களைத் தாபித்து வருகின்றீர்கள். அந்த வகையில் நீங்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் அழைப்பின் பேரில் 1968-ம் ஆண்டு நிகழ்ந்த சைவ மகாநாட்டுக்கு தலைவராக வந்து ஒரு திருமுறைக் கோயிலையும் தாபித்து, நால்வர் கோயிலுக்கும் அத்திவாரமிட்டு, நால்வர் விக்கிரகங்களும், சேக்கிழார் திருவுருவமும் ஆக்கவேண்டிய ஏற்பாடுகளையும் செய்தீர்கள்; அடுத்த ஆண்டு வந்து கந்தபுராண விரிவுரைகளும் சித்தாந்த வகுப்பும் நடத்தினீர்கள் நீங்கள் ஆற்றிய சைவப் பணிக்கு நமது யாழ்ப்பாண நாடு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

மதுரை மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரப் பெருமான் செட்டியாரவர்களுக்கு நீண்ட ஆயுளையும் சிவத்தொண்டு புரியும் ஆற்றலையும் குறைவிலா வாழ்வையும் அருள்புரிவாராக

## ஆடிப்பூர அம்பாள் விழா
## வண்ணை வடிவாம்பிகை
## தேர் உலா

ஆடிப்பூரத்திலே தீர்த்தம் ஆடும் வண்ணை அம்பிகையின் விழாக்கள் வழமை போல் சிறப்பாகநடைபெற்றன.

வீதிகள் யாவும் புனிதமாய் அடியார்கள் தேவி உலாவைத் தினமும் மங்களமாய் உபசரித்து வணங்கிய வண்ணமும் தேர் தீர்த்தம் ஆம் பெருநிகழ்ச்சிகளும் வண்ணையின் சைவவளத்தை நினைவூட்டி வைத்தன.

உ
பேராசிரியர், கலாநிதி
பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள்
அவர்களின் அறுபதாம் ஆண்டுநிறைவு
மணிவிழாப்

## பிரார்த்தனை உரை



பாரத தர்மம் சநாதந தர்மம். வேத ரிஷிகளின் வழி வந்தது.

பாரத தர்மத்தின் அருமை பெருமைகளை நினைவு கூரத்தக்கவகையில், வாழ் வாங்கு வாழ்பவர்கள், கனம் குருக்கள் ஐயா அவர்கள்.

x x x

அவர்கள் வகிக்குச் பாரிய உத்தியோகம் சுமை, அவர்களின் நித்திய கருமங்கள், சிவபூசைக் கிரமங்களில், எட்டுணையும் பாதிப்பதில்லை. வேத நெறியில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள் அவர்கள்

x x x

அவர்களின் 'நா' நடக்கும் போதும், இருக்கும் போதும், நிற்கும் போதும், கிடக்கும் போதும், எத் தொழிலைச் செய்யும் போதும், வேத மந்திரங்களை உச்சரித்துக் கொண்டேயிருக்கும் இந்நிலையை ஆழ்ந்து நோக்குவார் நோக்குவ துண்டாயின்,

மந்திர திருஷ்டாக்களின் உயர்நிலை பற்றிய சிந்தனை நினைவுக்கு வரலாம்.

x x x

இப்பொழுது எடுக்கும் மணிவிழா, இனி உரிய காலந்தோறும், ஐயா அவர்களுக்கு எடுக்கும் விழாக்களுக் கெல்லாம்,

கால்கோள் விழாவாய் அமைவதாக என்று திருவருளைப் பிரார்த்திப்போமாக.

திருநெல்வேலி, இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
10-7-82. சி. கணபதிப்பிள்ளை

## அருள் ஆசித் திருவுடையர்

"இறை - ஒளி"

மலர்இலங்கா நாட்டில் மணிவிழா இந்த
அலைநவிலுங் கைலாச நாதக் — குலகுரு
காணும் கவினெழிற் காட்சி சமயநெறி
பூணும் பொலிவின் புடம். (1)

கற்றனைத் தூறும் கலையறிவென் றுங்குவர்
வுற்றமொழி மூன்றும் உறகண்ணுய்க் — கற்றைமுடிக்
கைலாச நாதக் கடவுளருள் சேர்மாணி
கைலாச நாதகுருக் காண. (2)

கற்றபின் அத்தகைக் கண்நின்று காண்கருமம்
உற்றமுறை ஓர்ந்தகுரு ஓங்குசைவ — நற்றவத்தர்
சங்காபி டேகநெறி சாத்தினர்கோ லாலம்பூர்
அங்காம்வேள் கோயில் அரங்கு. (3)

நாகரிக இந்த நயநுண்மம் பண்புவளம்
நாகலையாம் உண்மை மலரவைக்கும் —பாகனெனக்
கைலாச நாதக் கலாநிதிப்பே ராசிரியர்
கைலாவண் மஞ்சீர்க் கவின். (4)

பூண்டுசெந்தண் மைமுழு புரிநூற் பொலிவுநனி
காண்டற்குக் கைலாச நாதகுரு — யாண்டுமூனர்
ஆண்டகையாய்க் காஞ்சியருள் ஆசித் திருவுடைத்தாம்
நீண்டவாழ் வுண்டிக் கிலத்து. (5)

# வாகனப் போக்குவரத்து அறிவித்தல்

## 1982-ல் நடைபெறும் நல்லூர்க் கந்தசாமி கோவிலின் வருடாந்த உற்சவ விழா

மேற்படி விழாவின் பொருட்டாக 25-7-82 தொடக்கம் 19-8-82 வரை இரு நாட்களும் உட்பட்ட நாட்களில் கீழ்க்கண்ட வீதிகள் சகல வாகனப் போக்குவரத்துக்களுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. பருத்தித்துறை வீதியில் அரசடிச் சந்திக்கும் இரண்டாவது மைல்கல்லுக்கும் இடையில் உள்ள பகுதி.
2. கோவில் வீதியில் பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையில் உள்ள பகுதி.

### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப் போக்குவரத்துக்களில் சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வழமையாக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை வீதி வழியாகச் செல்லும் சகல பஸ் வண்டிகளும் ஆனைப்பந்திச் சந்தியிருந்து நாவலர் வீதி வழியாகத் திரும்பிச் செல்லுதல் வேண்டும்:

### வாகனங்களை நிற்பாட்டி வைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிற்பாட்டி வைப்பதற்காக நான்கு இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். இந்நான்கு இடங்களையும் நன்கு உபயோகிக்குமாறு சாரதிகள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

### மேற்படி இடங்களாவன

1. அரசடி வீதி வழியாகக் கந்தசாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை அம்மன்கோவில் மைதானத்தில் நிற்பாட்டல் வேண்டும்.
2. தென் பகுதியிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிற்பாட்டல் வேண்டும்.
3. கோப்பாய்த் திசையிலிருந்து வரும் வாகனங்களை முத்திரைச் சந்தை மைதானத்தில் நிற்பாட்டல் வேண்டும்.
4. பலாலி வீதி/திருநெல்வேலி வழியாகக் கோவிலுக்கு வரும் வாகனங்களைத் திருநெல்வேலி சிவன் கோவில் வீதியில் நிற்பாட்டல் வேண்டும்.

ஏ.என்.டபிள்யூ. பர்ணந்து,
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்,
யாழ்ப்பாண மாவட்டம் (1)

பொலிஸ் அலுவலகம்,
யாழ்ப்பாணம், 19-7-1982

M/8, 30-7-82

## கடையிற் சுவாமி குருவார அன்னசத்திரம்

1-5-81 தொடக்கம், 30-4-82 வரையுள்ள வரவு செலவுக் கணக்கு

பண வரவு

| | |
|---|---|
| இ. செல்லப்பா | 50-00 |
| சே. சர்வானந்தன் | 25-00 |
| திருமதி பூ. பாலசிங்கம் | 25-00 |
| கி. தியாகராஜா (S.T.R) | 40.00 |
| துரை அன் கம்பனி | 25-00 |
| கந்தசாமி கறுஜ் | 50-00 |
| கனக சுப்பிரமணியம் | 10-00 |
| பிரிதிவிராஜ் (அன்னசத்.) | 50-00 |
| கல்யாணி கிறீம் கவுஸ் | 25-00 |
| Dr V. குகமூர்த்தி | 20-00 |
| முத்தையா குடும்பத்தினர் | 20-00 |
| S.R.M. அன் சன்ஸ் | 10-00 |
| ஆ. நல்லதம்பி | 10-00 |
| திருமதி S. மகேஸ்வரன் | 25-00 |
| ,, ஜ. நகுலேஸ்வரன் | 25-00 |
| V. M. V. நல்லநாதன் | 25-00 |
| S. V. M. | 25-00 |
| க. ம. ச. | 10-00 |
| அ. பேரம்பலம் | 10-00 |
| கேசவன் கறுஜ் | 20-00 |
| மணியம் சைக்கிள் Shop | 25-00 |
| K. S. நாகலிங்கம் | 10-00 |
| ஸ்ரான்லி பேனிசிங்பலஸ் | 25-00 |
| சுப்பிரமணியம்என்ஜினி. | 50-00 |
| மதிய பெரியம்மா | 10-00 |
| நல்லதம்பி ரெத்தினம் | 10 00 |
| ஸ்ரீ நா. சண்முகநாதன் | 100-00 |

பொருள் உதவியவர்கள்

மில்க்வைற் ஸ்தாபனம் 1மூடை அரிசி
E. K. T. தியாகராஜா 1 புசல் அரிசி
அரஸ்கோ ஸ்தாபனம் 1 புசல் அரிசி
மற்றும் யாழ் அன்பர்கள் பொருள்கள் தந்து உதவினார்கள்.

1-5-81 தொடக்கம், 30-4-82 வரையுள்ள வரவு செலவுக் கணக்கு விபரம்

| | வரவு ரூ. ச. | செலவு ரூ. ச. |
|---|---|---|
| அடியார் பணம் | 1780-00 | |
| பூசைச் செலவுகள் | | 550-00 |
| கோட்டுச் செலவு; | | 1,325-00 |
| பந்தல்வேலி, | | 346-00 |
| அன்னதானம் | | 255-85 |
| மின்சாரம் | | 20-50 |
| வாடகை | 1,620-00 | |
| விளம்பரம் | | 30-00 |
| மேலதிகச் செலவு | 127-35 | |
| | 2,527-35 | 2,527-35 |

R. C. மன்மதராசன்
தருமகர்த்தா
குருவார அன்னசத்திரம்,
20-8-82

## இணுவை முருகன் திருமஞ்சம்

இலங்கையிலே மிகப்பெரியதும் அருள்மிகு இணுவைப் பெரியசந்நியாசியாரால் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டதுமான இணுவில் கந்தசுவாமி கோவில் திருமஞ்சம், முருகனடியார்களின் உதவியோடு மஞ்சத்திருவிழா உபயகாரர்களால் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளது.

## இலங்கை சைவப் பாதுகாப்புக் கழகம்

இக் கழகத்தினர் கடந்த 16-07-82 சனிக்கிழமை இணுவிக் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தலைவர் S R கனகநாயகம், வழக்கறிஞர் ச. ஸ்ரீனிவாசன், வழக்கறிஞர் உலக இந்து பரிஷத் தலைவர் யோகேந்திரா துரைசாமி யாழ் இந்துக் கல்லூரி முன்னை அதிபர் இ. சபாலிங்கம் முதலாகப் பலர் உரையாற்றினர்.

## ஆயிரம் பிறை கண்ட கலை அரசு அரனடி அடைந்தனர்

நாடகமே உலகம் என்ற முதுமொழிக்கிணங்கவாழ்க்கையை நாடக அரங்காக்கி கலை உணர்ச்சிததும்ப இந்நாட்டுக்கலைசாரத் தீபமாய் விளங்கிய கலையரசு சொர்ணலிங்கம் சுவர்க்கப் பாதையிற் பயணத்தை 27-07-82 இல் ஆரம்பித்து விட்டார்.

இலங்கை நாடகத்துறையில் இயங்கிய போராளி இவ்வுலகிலிருந்து மறைந்துவிட்டது நூற்றாண்டு நிறைவைக் காணக்கூடிய மன ஆற்றலுடன் தொண்ணூற் நான்கு ஆண்டுகள் வாழ்ந்து வாழுங் காலமெல்லாம் நாடகக் கலையிற் கண்ணுங் கருத்துமாயிருந்த கலை அரசுக்குக் கலை உலகில் ஒரு தனி இடம் உண்டு.

கலைத்துறைக்கு வாழ்க்கையை அர்ப்பணித்தவரையும் கூடக் காலன் விடவில்லையே. ——

## பகீரதப் பிரயத்தனப் பயணம்!



பத்தர் : வெளிநாட்டுக்குப் பயணஞ்செய்வதென்றால் விண்வெளி யாத்திரைக்கு ஆயத்தஞ்செய்வதுபோல பென்னம்பெரிய ஆயத்தம் செய்யவேணும்.......!

சித்தர்: என்ன? அவ்வளவு பெரிய சாதனை புரிய வேண்டுமா? என்ன.......!

பத்தர்: கடவுச் சீட்டுப் பெறுவதிலேயே தடம் புரளவேண்டும் சித்தரே!

( - "நாவன்மார் - நாதன்" )

## அணிதிகழப் பொலிந்த மணிவிழா

( 1 - ஆம் பக்கத்து வளர்ச்சி )

சமயங்களை எடுத்துத் தலைவரும் உரை நிகழ்த்தியவர்களும் அடுக்கி அடுக்கி அவையை இறும்பூதெய்த வைத்தனர். அவ்வாறே மணிவிழாச் சபையார், நீர்வை கந்தசாமி தேவஸ்தானம் ஆவரங்கால் சிவபெருமான் தேவத்தானம், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், சிவானந்த குருகுலம், யாழ் பல்கலைக்கழக இந்துமாமன்றம். இந்துநாகரிகத்துறை மாணாக்கர்கள் உட்படப் பல சங்கங்கள் வாழ்த்துப் பாமாலை மடல்களை வழங்கினர்.

மணிவிழாக்கண்ட பிரம்மஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் தங்கள் உரையில் மிக அழகாகத் தமிழ்ச் சைவ வேத சிவாகமச் சால்புநெறியை விளக்கி, தந்தை தாயரைத் தகைசால் கல்வி தந்த ஆசான்களைத் தீட்சை வைத்த குருவைப் பெரியோரை மறவாது நெஞ்சில் நிறைவாக நிற்க வைத்தலே நல் வாழ்வுக்குரிய நெறியென்றும் அவ் வழியிலே ஒழுகத் தமக்குதவி ஆற்றிய தந்தையின் மூன்மாதிரியையும் தாய் அம்மையின் நேயத்தையும் கசடறக் கற்று அவ் வழி நிற்கவைத்த ஆசாரியர்களையும் நினைவுகூர்ந்துகொண்டு வாழ்வதே மாண்பென்றும் அறிவுரை பகர்ந்தனர். தலைமை தாங்கிய கலைமகன் ஆசிரியரின் அரிய தொடர்பு பல்லாண்டுப் பண்புடையதென்றும் மணிவிழா அணியினரின் அன்பு கனிந்த செயல் வேத சிவாகம வித்தகத்துக்கும் குருபீடத்துக்கும், ஆசிரியத்துறைக்கும் எடுத்த விழாவே யாகும் என்றும் சுட்டிக் காட்டினர்.

விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் மணிவிழாச் சபையினர் அளவுகடந்த நன்றியைப் பலவேறு வகையினருக்குச் செலுத்தவேண்டிய அளவில் விழாவின் பொலிவு பெருஞ் சிறப்புற்றதென்றும் நாவால்மட்டுமன்றி உள்ளத்தால் உணர்ந்து உரைக்கவேண்டிய நன்றி இதுவென்றும் கூறினர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

## ஈட்டு வழக்கில்விற்பனவு அறிவித்தல்

வழ. இல: 15416

1. கணபதிப்பிள்ளை குமாரசாமி
2. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

புலோலி தெற்கு, புலோலி — வழக்காளிகள்

எதிராக

1. முருகேசு தங்கவேலாயுதம், கல்வீட்டு வளவு, அல்வாய் தெற்கு, அல்வாய் — எதிராளி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1982 ம் ஆண்டு ஆவணி மாதம் 19ம் திகதி (19-8-82) வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன இடாப்பு

வடமராட்சி யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று துன்னாலை வீரசுந்தரமுதலிக் குறிச்சியிலுள்ள 'செட்டிபாதி' கி. ப. பத்தரை (10½) எல்லை கிழக்கு எனக்கும் ஆழ்வாப்பிள்ளை இராசரெத்தினத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு ஆழ்வாப்பிள்ளை இராசரெத்தினத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு எனக்குரிய ஆதனம், தெற்கு எனக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இவ்வெல்லைக் குட்பட்டவைகள் முழுவதும் (முற்பதிவு: பரு. - A 249/8) (மதிப்பிட்டவிலை ரூபா 32000/-)

| | |
|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா 14025-00 |
| வட்டி ரூபா 14025- க்கு 18 வீதப்படி 28-2-1980 தொடக்கம் 12-2-1982 வரை | 4838-57 |
| வட்டி ரூ. 18863/க்கு12 வீதப்படி 13-02-1982 | 18863-57 |
| தொடக்கம் 19-8-1982 விற்பனவு வரை | 1131-78 |
| மொத்த ரூபா | 19995-35 |

குறிப்பு:- வழக்காளிக்குரிய பணத்தை எதிராளி கொடுத்து ஏலவிற்பனவை நிறுத்துவதாக விருந்தால் விற்பனவு ஆணையாளருக்குரிய செலவுப் பணத்தையும் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட விற்பனவு நிறுத்தக் கட்டளையையும், விற்பனவு ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

சிவலிங்க நிலையம். வி. எம். றேட், 
பருத்தித்துறை. 9-7-82.

க. நல்லலிங்கம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்

Hindu Organ

Fri. 16, 23, 30-7-82

## DISCHARGING ITS DUTY

Religious organizations do not seem to realize the fact that they owe a duty to not only the followers of their respective religions but also those who with great fore-thought and deep sense of responsibility had founded these societies decades ago

As these organizations plod their weary-way passing the milestones of Jubilees they certainly do get enriched with valuable experience of men and matters that spur them on to further efforts.

The Vivekananda Society that was founded in the metropolitan city of Colombo by the admirers of Swami Vivekananda after his significant visit to this Island, has been a Cultural Centre for the religious minded Tamils living in the Maritime Province in the West. Having had the benefit of the wisdom and guidance of the leading Hindus of this country, the Vivekananda Society has grown from strength to strength catering for the spiritual aspirations of the people within its reach

We take immense pleasure in congratulating the Vivekananda Society on its onward march and felicitating it on its reaching another milestone of growth.

Metropolitan Colombo has undoubtedly become the centre of activities of religious organisations Men and women, away from their homes in the North and the East, are able to make full use of their leisure hours in providing themselves with the necessary atmosphere for literary, cultural and religious studies. In this direction, the Vivekananda Society has done yeoman service to the cause of Tamil and Saivam.

While wishing the Society further and fuller progress, we on behalf of the Jaffna Saiva Paripalana Sabhai that is crawling towards the coveted milestone of a century of progress, would suggest to it the need for more service, in co-ordination with other societies and sangams, in the sphere of religious practice. By religious practice we mean, the need for Saivaites to be initiated into the religion with introductory rites and the strict adherence to the principle of non-killing. In other words all Saiva Societies must insist on their members being uncompromising vegetarians.

---

## DEMISE OF NUNAVIL'S NONAGENERIAN

**A Tribute from:**
**Muhandiram Dr. E P. Rasiah, J. P.**

The late K. Visvalingam of Nunavil, Chavakachcheri, for about 12 years Accountant of the Jaffna Saiva Pirakasa Press, aged 93 years, passed away on the night of July 5, 1982, surrounded by his kith and kin.

"Painlessly, peacefully on a full-moon night
The boat slipped its moorings to make Port".

Exit a fond father, exit a man whose word was as sound as a bond, exit the grand old man of Nunavil. A guileless heart that throbbed with love and fellow-feeling gradually ceased to beat; closed for ever those winsome, wise eyes; stilled now was that commanding voice. At such a moment, it is said that,

"On some fond breast the parting soul relies
Some pious drops the closing eye requires"

These have I endeavoured to supply with these artless but affectionate lines.

Though born into life in the lap of opulence as a member of a blue-blooded family, he lived a simple life, discarding ease and indolence. His married life was marked with unparalleled domestic felicity. He was a fond father ever proud of his two loving sons and three dutiful daughters. A beautiful blend of simplicity, service and religious observance, characterised his life richly lived and evenly shared. To the last he believed in causing his heart, nerve and sinew to serve their turn, filling the unforgiving minute with 60 seconds' worth of distance run.

After serving the Malayan Govt. for some years, he returned to his birth place with his pockets full and began to serve his people and various public Organisations. For about 12 years, he served as Accountant of the Jaffna Saiva Prakasa Press and made its financial position quite sound I came into contact with him as Treasurer of the Saiva Paripalana Sabhai and found that I could set my signature to cheques and documents submitted by him, without further scrutiny.

Once a Sub-Inspector of Police raided his residence and took away some jewellery during an Emergency period. He came to me quite upset by it. I pacified him and took him to the S. P. who listened to his tale and suggested two courses of action — Prosecuting the S. I. or getting him transferred. Mr. Visuvalingam in reply said:-

"I do not like to harm him, although he has harmed me. I will be satisfied if he is transferred." And the S. I. was immediately transferred and it was a glorious feather in Mr. Visuvalingam's cap.

He had lived a full life, discharging creditably his obligations to his people, his country and the Tamil community. May his soul rest in Peace.

While offering my heart-felt condolences to Mrs. Visuvalingam and the other members of the family, I pray that the Samsaric journey of the departed soul should be short and that he should ere long, attain that transcendental state that would enable him to enter the portals leading to Final Liberation.

Om! Shanthi! Shanthi!! Shanthi!!!

---


# The Jaffna Co-operative Stores Ltd.

**420, Hospital Road — Jaffna.**

Whereas the Legal Heirs of the Estate of late Mrs. Navamany Rajasingham of 6, Ratnakara Place Dehiwala, have applied to the Directors of the above-named Company for the issue of a Duplicate Certificate in respect of Four (4) Ordinary Shares of Rs. 100/- each, numbered: 872 to 873; 1995; 5744 registered in her name, the original of which is represented to have been destroyed, lost or mislaid, NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for Duplicate Certificate, the original of which will be deemed to have been cancelled.

420, Hospital Road,
JAFFNA.
16th, July, 1982 (5)

**G. SRI MANOHARAN**
**Secretary**


---

## THE ONLY WAY To Pull Mankind OUT OF CHAOS

*[By, K. RAJAH, Seremban]*

Man must be basic in his conception and perception of things, in order to arrive at right conclusions

The UNIVERSE is a manifestation of the spirit of God, who is the first-CAUSE, and the Knower of all things.

God is an unknowable ESSENCE. He can be known only through His Prophets, who come from time to time with God's knowledge (Religion) to educate and enlighten mankind, and serve as the basis of culture and civilization.

All men are made of the same clay of human spirit and element, and live on this earth for the purpose of attaining spiritual development and human virtues, in order to qualify for their spiritual destination on quitting their body

We live in a world, which is in evolution. Therefore, all knowledge must be relative to the period in which we live.

It is therefore incumbent upon all to investigate unfettered by tradition and prejudice and identify with the knowledge of the Prophet of God of our period.

When man fails to be in the light of the spiritual knowledge of the period in which he lives, he gropes in darkness, and commits crimes.

To quote, in support of this view, from another religious scripture, Jesus at the time of His crucification, uttered the following:

"father, forgive them, for they know not what they do."

The world today is in a similar situation; no man is safe and no property is secure anywhere in the world, despite the efforts of leaders and organizations to bring peace and harmony to our turbulent world.

An evolving world needs the latest knowledge of Religion and Science to solve its problems, and to contain mankind, in a planetarily awakened world. No one can reap the harvest of today in the sun shine of yesterday.

Seremban
30-5 82.

---

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

---

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 336 ) on Friday, 16, 23, 30-7-82*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

